# தங்கள் இரட்சிப்பை சந்தேகிக்கிறவர்களுக்கான நம்பிக்கை - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், இதுவரை கேட்கப்பட்ட மார்க்கம் சார்ந்த கேள்விகளை பார்க்க இருக்கிறோம்: உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயத்தோடு MMMMஇருப்பது எப்படி?

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தில் காண்பீர்கள். அல்லது நீங்கள் இன்று கற்பனை செய்து பார்க்க முடியத் பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடபோகிறேன்?

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர் ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர் எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிகாகோ இல்லிநோசிஸ்.

இவர் மேலும் சில கேள்விகளுக்கும் பதில் அளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்த பின்னர் தங்கள் வாழ்வில் பின்வங்கியவர்களை குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிருஸ்துவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும் போது  தேவன் அவனுக்காக செய்த செயல்களை ரத்து செய்திடுமா?

நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளைக்கும் என்றன்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கும் நிச்சயம் நமக்கு இருக்கிறதா?

இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். நாம் மிகவும் முக்கியமான தலைப்பை பார்த்துக்கொண்டிருக்கிறோம் நிச்சயத்தோடு இருக்கிறோமா? நாம் நம்முடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவோம் என்ற நிச்சயம் நமக்கு இருக்கிறதா? நாம் அனைவரும் தேவனோடு நித்தியத்தை களித்திடுவோம் என்ற நிச்சயத்தை பெற விரும்புகிறோம், ரைட்? கேள்வி இதுதான், எப்படி? நீங்கள் விசுவாசிக்க வேண்டியது என்ன? தேவனுடைய வழி என்ன? நாம் என்ன பிசிக்கொண்டிருப்பது மிகவும் முக்கியமான காரியம். இன்றைக்கு, எர்வின், நாம் டேட் தர்னரை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம், CNN

உரிமையாளராக இருந்தவர், அவருடைய சொந்த வாழ்கையில் கிருஸ்துவத்தை பற்றி பல சுவாரஸ்யமான கருத்துக்களை தெரிவித்திருக்கிறார் அதைப்பற்றி எங்களுக்கு கொஞ்சம் சொல்லுங்க.

**லட்சர்:** சரி, செய்திதாள்களின்படி அவர், "நான் ஏழு எட்டு முறை இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், என்னுடைய விசுவாசத்தை இழந்த பொது, நன்றாக இருந்தது போல தோன்றியது என்றார்."

**ஆன்கர்பெர்க்:** இப்படி இருக்க வேண்டாம்.

**லட்சர்:** சரி, நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் ஈன்று சொல்லுகிற ஒருவரின் உதாரணம் இருக்கிறது, அவர் கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்கிறார் ஆனால் அதற்கு பலனில்லை. இன்றைக்கு நம்முடைய தலைப்பு உறுதியை மையம்படுத்தி இருக்கிறது, இது நாம் பார்த்துக்கொண்டிருக்கும் காரியத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது "நித்திய பாதுகாப்பு." சரி ஒருவேளை ஒருசிலர் சொல்கிறார்கள், நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் ஆனால் மறுபடியும் பாவத்தில் ஏன் விழுகிறார்கள்? ஒரு, நபர் தான் பவம் செய்யும் பொது தனது இரட்சிப்பை இழந்துவிடுவதாக நினைக்கிறான். இப்படிப்பட்ட காரியங்களை கையாழுவது எப்படி? அவற்றில் சிலவற்றை காண்போம் என நம்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். இந்த தலைப்பில் நாம் பேசுவதை கேட்கிறவர்கள் எதற்காக இதை பேசுகிறார்கள் என்று நினைத்திடலாம்

ஏனென்றால் இந்த கேள்வியினால் சபை அரம்பதில்லிருந்தே போராடிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஜனங்களுக்கு சந்தேகம் இருப்பதாலும் பலர் இதை அறியாமல் இருப்பதாலும் இதை பற்றி பேசிட இருக்கிறோம். நீங்கள் இரட்சிக்கப்பட்ட பிறகு பாவம் செய்வதினால் இரட்சிப்பை இழந்திருந்தால், நாமும் டேட் டர்னர் மற்றும் அவரைபோன்றவர்களுடன்  பயணித்துக்கொண்டிருக்கிறோம். ஹர்ரி அயன்சீட் பற்றி  அவர்களுக்கு சொல்லுங்கள்.

**லட்சர்:** சரி, ஹாரி அயன்சைடிடம் ஒரு முறை ஒருவர் வந்து சொன்னாரம், “நான் 99 முறை இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு இது பிடித்திருக்கிறது. ஒருமுறை எங்கள் வீட்டில் இருந்த ஒரி பெண் அவள் சபையில் வளர்க்கப்பட்டவள் அவளுக்கு போதிக்கப்பட்டிருந்த காரியம் நீ பவம் செய்யும் பொது உன்னுடைய இரட்சிப்பை இழந்துவிடுவாய். ஏதோவொரு காரணத்திற்காக செய்யப்பட்ட பெரிய பாவமாக இருந்தாலும் சரி, அதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். அவங்க சொன்னங்க ஒரு குடிகாரன் ஒவ்வொரு ஞாயிற்று கிழமைகளிலும் இரட்ச்சிப்பை அடைவானாம், உண்மையில், மறுபடியும் திங்கட்கிழமைகளில் குடிக்க செல்கிறான். மறுபடியும் வந்து மீண்டும் இரட்ச்சிப்பு பெறுகிறான். இறுதியாக, போதகர் மிகவும் சோர்வடைந்த பொது, அவர், “அடுத்த முறை நீ இரட்ச்சிக்கப்ப்படும்போது, நீ பரலோகத்திற்கு போவாய் என்ற நிச்சயத்தை கொடுக்க உன்னை சுடுவோம் என்றார். ஏன்னா எப்படியும்

அவருடைய இரட்ச்சிப்பை இழந்திடுவார், அது இருக்கும் போதே பரலோகம் போயிடட்டுமே.

**ஆன்கர்பெர்க்:** நான் நிச்சயமாக சொல்லுவேன் இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருக்கும் எல்லவிதமான மக்களுக்குள்ளும் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இதற்கான பதில் தான் என்ன?

**லட்சர்:** இதில் நாம் என்ன செய்யப்போகிறோம், நாம் என்ன செய்யவேண்டுமென்றால், ஜான், வசனங்களுக்கு நேராக ஜனங்களை நடத்தி சென்று மெய்யான விசுவாசிகள் பாதுகாப்பாக இருப்பதை உணரச்செய்ய வேண்டும், அங்கு ஏதோவொரு சொழ்நிலையில் டேட் டர்ணருடைய சம்பவத்தை சொல்ல வேண்டும் ஏன்னா நாம் நம்பும்படியான மற்ற பல காரியங்களை அவர் சொல்லி இருக்கிறார், இறுதி தீர்ப்பு நம்முடையதாக இல்லாவிட்டாலும், அவர் சுவிசேஷத்தை புரிந்துகொள்ளவில்லை என்பது மிக தெளிவாக இருக்கிறது. இயேசு சிலுவையில் மரித்த பொது நடந்தததை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட மனநிலையில் இருப்பவர்களுக்கு இவர் ஒரு உதாரணம், அது சாத்தியமானதல்ல. நாம் முந்தய பாகங்களில் இதைக்குறித்து பேசிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** சரி இப்போதும் வசனத்தில் ஆழ்ந்து நோக்கிடலாம்.

**லட்சர்:** சரி. உண்மையை கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களை குறித்து பார்க்கலாம். ரோமர் 8ம் அதிகாரத்தை பார்க்கலாம். இதை

தேவனுடைய நோக்கங்களில்  உடைக்க முடியாத 5 தொடர்புகலாக காண்கிறேன். அதாவது, ஒரு திட்டமின்றி வீடு கட்ட ஒருவரும் முன்வராதது போல, தேவனும் நம்மை இந்த பூமியில் நிறுத்தவில்லை, அவருடைய ஜனத்திற்கு, விசுவாசிப்பவர்களுக்கான திட்டத்தை வைத்திருக்கிறார் - அதை பார்க்கும்போது என்னை பொறுத்தவரை, அடுத்தவர்களுக்கு இல்லாவிட்டாலும் - நிச்சயமாக அவரை, விசுவசிப்பவர்களுக்கு அது உறுதியானது.

இதைத்தான் ரோமர் 8:29-30 கூறுகிறது: “தம்முடைய குமரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேரானவராய் இருக்கும்பொருட்டு தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பயிருக்கும்படி முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்தும் இருக்கிறார். எவர்களை அழைத்தரோ அவர்களை நீதிமான்கள் ஆக்கியும் இருக்கிறார். எவர்களை நீதிமங்கலக்கினாரோ அவர்களை மகிமைபடுத்தியும் இருக்கிறார். வாவ். மூச்சை இழுத்து விடுங்கள்.

விசுவசிக்கிரவர்களுக்கு தேவன் செய்திடும் 5 காரியங்கள். முதலாவதாக, அவர்களை முன்றிந்திருக்கிறார். அதாவது காலங்களுக்கு அப்பாற்பட்டு அவர் இவர்களை அறிந்த்திருக்கிறார். அதற்க்கு அர்த்தம் இவர்களோடு அவருக்கு உறவிருக்கிறது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலரை பார்த்து சொல்கிறார்: “பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை

மாத்திரம் அறிந்துகொண்டேன்." (ஆமோஸ் 3:2) இதற்க்கு அர்த்தம் தேவன் மற்ற ஜனங்களை அறியவில்லை என்பதல்ல. இதற்க்கு அர்த்தம் என்னவென்றால், "உங்களிடத்தில் தான் நான் உறவு வைத்திருக்கிறேன்."

எனவே தேவன் யாரை முன்றிந்தாரோ, அவர்களை முன்குறித்திருக்கிறார், இதை வேறு விதத்தில் சொன்னால், அவர் முன்ன்றிந்த்திருக்கிறார். சரி, இது கடுமையான வார்த்தை. சிலர் யோசிக்கிறார்கள், ஆகா , கதை கட்டுகிறார்கள். இல்லை. இது வேதத்தில் இருக்கிறது, எல்லா இடத்திலும் இருக்கிறது. அவர்களுக்கான தமது அன்பில் அவர் எல்லாவற்றையும் காலங்களுக்கு அப்பால் தெரிந்து வைத்திருக்கிறார். அவர் முன்னரிந்த்திருக்கிறார், ஒரு கணக்கெடுப்பு அல்லது பட்டணத்தின் எல்லைகளை அறிந்திருப்பது போல. "தமது குமாரனுடைய சாயலாக இருப்பதற்கு." (ரோமர் 8:30) நாம் கிறுஸ்துவை போலாக வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். இதை, கவனியுங்கள், "எவர்களை முன்குரித்தரோ அவர்களை அழைத்திருக்கிறார்..." (ரோமர் 8:30) கிறுஸ்துவை என் இரத்ச்சகரக ஏற்றுக்கொண்டு அழைப்பை பெற்ற பொது எனக்கு பதினாலு வயது. உங்களுக்கு என்ன வயசு ஜான்?

**ஆன்கர்பெர்க்:** ஏழு

**லட்சர்:** ஏழு. ஆல்ரைட். இதிலிருந்து நமக்கு, தேவன் நம்மை அழைத்திருப்பதும்  இயேசுவை நாம் விசுவசிப்பதும் தெரிகிறது. இதை

கவனியுங்கள் அழைக்கப்பட்டவர்கள் எல்லாரும் இப்போது, நீதிமானக்கப்படுகிறார்கள். ஒரு நிகழ்ச்சி முழுவதும்  இதைக்குறித்து பேசியிருக்கிறோம். அவரால் நீதிமானக்கப்பட்டவர்கள் - இங்குதான் எல்லா காரியங்களும் அடங்கியிருக்கிறது - மகிமைபடுத்துகிறார்(ரோமர் 8:30) தேவன் சொல்கிறார், என்னை பொறுத்தவரை, நீ ஏற்கனவே பரலோகத்தில் தான் இருக்கிறாய். நான் முன்குறித்தவர்கள், என்னுடைய பிள்ளைகள், இவர்கள் தான் இங்கு மகிமையடைகிறவர்களாக இருப்பார்கள், அதில் எந்த மாற்றமும் இல்லை, எந்தவித சறுக்கலும் கிடையாது சந்துகளில் ஒருவரும் விழுந்து போவதும் கிடையாது. இதற்கு என்ன அர்த்தம் என்த்ரால் நாம் உண்மையை இயேசுவை விசுவசித்திருந்தால், உண்மையான விசுவாசத்தை குறித்து நம்மால் பேச முடியும், ஆனால் உண்மையை இயேசுவை விசுவாசித்தல் மட்டுமே இரட்ச்சிக்கப்பட முடியும். அப்போதுதான் பரலோகம் சென்றிடுவோம்.

நித்த்யத்திர்க்கு முன்பு தேவன் நிகழ்த்திடும் 2 காரியங்கள்: அவர் நம்மை முன்னரிந்த்திருக்கிறார் நம்மை முன்குறித்திருக்கிறார். இடையில் இருப்பது, அழைப்பு. நாம் இரட்சிசிக்கப்படும் போது நாம் அனுபவிக்கும் ஒரு அனுபவம். அடுத்த இரண்டும். நீதிமானாக்கப்படுதல் மற்றும் மகிமைபடுத்தப்படுதல். இதுதான் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச்செல்கிறது.

**ஆன்கர்பெர்க்:** உங்களிடம் ஒன்று கேட்கிறேன், ஏன்னா ஜனங்கள் நினைக்கிறார்கள்: “ஒகே, நான் தெரிந்துகொள்ளப்பட்டவன் என்பதை எப்படி அறிந்துகொல்வது?

**லட்சர்:** கிறிஸ்துவின் வக்குத்தத்தத்தினால் அதை அறிந்த்திருக்கிறோம். அதாவது, தெரிந்துகொள்ளப்படுதல் முன்குரிக்கப்படுதல் என்பதை பற்றி வேதத்தில் கூறப்பட்டிருந்தாலும் - அதை பற்றி அதிகமாக சொல்லிக்கொண்டா போகலாம் - நான் எப்போதும் சொல்வேன், இதைபற்றிஎல்லாம் யோசிக்கவேண்டாம் ஏனென்றால் உங்களுக்கே நீங்கள் தெரிந்த்துகொள்ளப்பட்டவரா, தேவனால் முன்குரிக்கப்பட்டவர என்பதை அறிந்துகொள்ள முடியும். அவரிடத்தில் வரும்போது, அவருடையவர்களில் ஒருவர் என்பதை நீங்கள் நிருபித்து காண்பித்திடுவீர்கள்.

அதாவது, இயேசு கிறிஸ்து கூறுகிறார், “என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.” (யோவான் 6:37) அவனுக்கு நித்தியா ஜீவனை கொடுக்கிறேன்”. கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை பற்றிக்கொல்வதாகும். அதைதான் நாம் செய்யவேண்டும். சில நிகழ்ச்சிகளில் நாம் நமக்கிருக்கும் சந்தேகங்களை பற்றி பேசிடலாம் என நினைக்கிறேன். ஆனால் உண்மை இதுதான், என்னை நான் நம்புகிறேனா என்ற காரியத்தை கவனிப்பதுடன், கிருஸ்துவை நஅந் நம்புகிறேனா என்பதையும் பார்க்கவேண்டும். கடந்த நிகழ்ச்சியில் நஅந் சொன்னது போல, தேவனுடைய பிரசன்னத்திற்குள் நாம்

நுழைந்திடும்படி இயேசு செய்து முடித்ததை நம்பி, அதை விசுவாசித்தல், நாம் இரட்சிக்கப்படுவோம் என்பதை அறிந்த்திருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** இந்த ஐந்து காரியங்களோடு நீங்க சொல்ல விரும்புகிற காரியத்தையும், 5 காரியங்களையும் புரிந்துகொண்டேன், அதாவது நாம் நின்று நம்முடைய விசுவாசத்தை முதலாவது கிறிஸ்துவின் மீது வைக்க வேண்டும், இவையெல்லாவற்றிலும் தேவன் ஆதியிலிருந்தே இடைபட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, இதை இலவசமாக பெற்றிருந்தாலும், உண்மை இதுதான், தேவன் எல்லாவற்றையும் பார்கிறார்.நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்த்தால், வேதம் கூறுகிறது நீங்கள் பாதுகப்புடையவர்கள் ஏனென்றால் நீங்கள் மகிமை அடையும்படிக்கு பரலோகம் செல்கிறீர்கள் என்று தேவன் கூறுகிறார். இது முடிந்தது போன விஷயம்

**லட்சர்:** மேலும் அங்கே சொல்லப்பட்டிருக்கிறது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, மருபிறப்படைதல் என்றால் என்ன என்பதை குறித்து போன முறை பேசினோம், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்கிறோம் அதாவது ஆவியினால் முத்தரிக்கப்படுகிறோம். ஆவியினால் முத்திரையிடப்படுதல், ஒரு கடிதம் அனுப்ப சான்றாக இருக்கிறது. ஒரு

ராஜா கடிதம் எழுதுகிறார், கடிதத்தின் முகப்பில் காந்தத்தை வைத்து கடிதத்தை முத்திரையிடுகிறார், இன்னும் விளக்கமாக சொன்னால், தனது மோதிரத்தின் முத்திரையால் முத்திரயிடுவார். அதை யாராவது திறந்து பார்த்தால் தெரிந்துவிடும். ஏனென்றால் அந்த காந்தம் உருக்கப்பட்டு உடைக்கப்பட்டிருக்கும். உரிய நபரிடம் ஒப்படைக்கும் படியாக முத்திரையிடப்பட்டிருக்கிறது. நாமும் இப்படிதான், இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, மீட்பின் நாளுக்கென்று நாம் முத்திரையிடப்படுகிறோம்." (எபே 4:30)

அதாவது, நஅந் இப்போதே பரலோகத்தில் இருக்கிறேன் என்று தெரியுமா, ஜான்? எபேசியர் 2 ல் சொல்லப்பட்டிருக்கிறது, "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே உட்காரவும் செய்தார்." (எபே 2:7) சரி, அதாவது நான் இந்த அரங்கில் சட்டநூகாவில் உட்கார்ந்துகொண்டே லாஸ் என்ஜெலேசில் இன்று மதியம் ஒரு போட்டியில் வெற்றிபெற முடியும் என்னுடைய பிரதிநிதி இருந்தால் போதும். இயேசு கிறிஸ்து பரலோகத்தில் நம்மை பிரதிபலிக்கும் பிரதிநிதியாக இருக்கிறார். அதனால் தான் பவுல் தொடர்ந்து சொல்லுகிறார், "தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே நீத்மான்களக்கியிருக்கிறார், அக்கினைக்குள்ளாக தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் - இதற்கும் மேலாக அவரே எழுந்தும் இருக்கிறார். (ரோமர் 8:33-34). இயேசுவே நம்முடைய வழக்குறைஞர். இப்ப கற்பனை செய்து

பாருங்கள் சாத்தான் வந்து சொல்கிறான், “பாவம் செய்த ஆத்துமா சாகவேண்டும். ஆகவே மரணத்திற்கு பாத்திரமான பாவி இங்கு இருக்கிறான். அவனை கொல்லுங்கள்.” அபோது இயேசு நம்முடைய பிரதிநிதியாக வழக்குரைஞராகபிதாவிடம் சொல்லுகிறார், “பிதாவே, நான் மீட்டுக்கொண்டவர்கள் இங்கிருக்கிறார்கள். அவனுடைய விலையை நான் செலுத்தியிருக்கிறேன். அவன் விடுவிக்கப்படட்டும்.” பிதா ஏற்றுக்கொள்ளுகிறார்.

அதாவது, இந்த உதாரணமானது பல முறை பயன்படுத்தப்பட்டுள்ளது அனால் இன்னொரு காரியத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன், ஒரு மனிதன் வேகமாக வாகனத்தை ஒட்டி சென்றதால் நூறு டாலர் பணத்தை அபராதமாக செலுத்த நேர்ந்தது. அவன் நீதிபதிக்கு முன்பாக நிற்கிறான் அவனிடம் நூறு டாலர் பணம் கிடையாது. இந்த நீதிபிதி எழுந்து  நீதிபதி உடையை கழற்றிவிட்டு சாதாரன உடையை அணிந்துகொண்டு அந்த குட்ட்ரவாளியின் அருகில் போய் நின்றார். அந்த நீதிபதி தன்னுடைய பாக்கெட்டிலிருந்து நூறு டாலர் பணத்தை எடுத்து மேஜையின் மீது வைத்தார். திரும்பி போய் தன்னுடைய மேலங்கியை போட்டுக்கொண்டு மேஜையில் அமர்ந்து, அந்த நூறு டாலரை கையில் எடுத்து,”தேங்க் யூ சார். உங்கள் அபராதம் செலுத்தப்பட்டது. உங்களுக்கு விடுதலை என்றார். அதுதான் சுவிசேஷம். தேவன் க்கான அபராதத்தை எதிர்பர்ர்க்கிறார். பிதாவாகிய தேவன் தன்னுடைய பரிசுத்தத்திற்கு நிகராக இருக்கவேண்டும்

என்கிறார். இயேசு சிலுவையில் மரித்ததினால் இரட்ச்சிப்பு முழுவதும் தேவனிக்குரியதாக மாறினது அதினால் நாம் மன்னிக்கப்பட்டிருக்கிறோம். தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சட்டுகிரவன் யார்? என்று கூறப்பட்டுள்ளது. "தேவனே நீதிமான்களாக்கியிருக்கிறார். (ரோமர் 8:33). சரி உலகத்தில் இதனை நற்செய்தி என்று ஏற்றுக்கொள்ளாவிட்டால் நற்செய்தியை எங்கிருந்து பெற்றுக்கொள்ள தேடுகிறார்கள்? இதுதான் சுவிசேஷம்

**ஆன்கர்பெர்க்:** சரி, இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்ளலாம் திரும்பி வந்ததும், வேகமாக பார்க்க இருக்கிறோம் ஏனென்றால் ஜனங்கள் துரிதமாக கேட்கவேண்டும் என்று இருக்கிறார்கள், இந்த கேள்விகளுக்கு பதில் கிடைக்காமல் அவர்கள் பாதுகாப்பான உணர்வுடன் இருப்பது இயலாத காரியம். அறிக்கையிடாத பாவங்களுடன் நாம் மரித்தால் என்ன நடக்கும்? கருப்பொருளில் சில மாற்றங்கள் இருக்கிறது. "நான் நாளைக்கு பாவம் செய்தால் ஏன்னா ஆகும்? இன்றைக்கு தேவனை நேசிக்கிறேன், அவருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறேன், அனால் நாளைக்கு, என்னவாக இருக்கும்? வேதாகம ரீதியில், நமக்கு இதற்க்கு பதில் கிடைக்காவிட்டால் பாதுகாப்பாக உணர முடியாது. எங்களோடு இணைந்திருங்கள். திரும்ப வந்ததும் இதற்கான விடைகளை பார்த்திடலாம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் எர்வின் லட்சருடன் நம்முடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவோம் என்ற நிச்சயத்தை பெறுவது எப்படி என்ற முக்கியமான் தலைப்பை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். சில கடினமான கேள்விகளை பார்க்கிறோம். எர்வின், அது, இவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிரார்கள் என்று தெரியும், அது தேவன் அவர்களுக்கு அளித்த இலவச ஈவு என்பதையும் புரிந்துகொள்கிறார்கள். சில ஜனங்கள் அது தேவனுடைய இலவச ஈவு என்பதை அறிந்த்திருந்தும் அதை தவறாக துஷ்பிரயோகம் செய்கிறார்கள். பல உதாரணங்களை பார்க்க முடியும். இருதயத்தை நமால் நியயந்த்தீர்க்க முடியாது. அனால் தளர்த்த விசுவாசம் முடையவர்களுடன் பேச முடியும், ஒருவேளை நீங்கள், இப்படி சொல்லலாம், அதாவது எர்வின், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் விசுவாசிக்கிறேன், அனால் சில வேளைகளில் அறிக்கை செய்யப்படாத பாவங்கள் எனக்கு முன்பாக எழும்பி நின்று என்னை அச்சுறுத்துகிறது. இப்படி சொல்பவர்களுக்கு உங்கள் பதில் என்ன?

**லட்சர்:** ஜான், இதற்க்கு பதில் சொல்லும் முன்பு ஒரு காரியத்தை குறித்து சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் ஒருசிலருடைய எண்ணம், ஓ, உனக்கு தெரியுமா, நீ இயேசுவை ஏற்றுக்கொண்டாலும் பிசாசின் வழிகளில் வாழலாம் என நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை நாம் சொல்லியாக வேண்டும் என நினைக்கிறேன்.

ஒரு வாலிப சகோதரனோடு உறவில் இருக்கும் பெண்ணை கற்பனை செய்யுங்கள் அவளை திருமணம் செய்துகொள்ள கேட்கிறான் இருவருக்கும் நிச்சயம் நடக்கிறது, அவன் நம்பிக்கைக்கு பாத்திரமானவன் என்று தெரியும், நிச்சயமாக. அவன் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருப்பதால் திருமண வாழ்க்கை சுமூகமாக இருக்கும். அவள் அவனிடம், ஓ எனக்கு பாதுகாப்பிருக்கிறது அவன் என்னை திருமணம்  செய்துகொள்வான் நான் இனி யாருடன் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று சொல்ல முடியுமா? இல்லை. அப்படி முடியாது. என்ன அவள் அவனை நேசிக்கிறாள். அவன் அவளை விரும்ப ஆயத்தமாக இருக்கிறான் என்பது உண்மை. அதை போலவே தான், ஒருவர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் பொது, அவர்கள் தங்களுக்குள்ளே சொல்ல முடியுமா, “ஓ பரலோகத்தின் நிச்சயம் எனக்கு இருக்கு. அதனால் பிசாசின் வழியில் நடந்திடுவேன் என்று? இந்த எண்ணம் க்குள் இருந்தால் அவர் நிச்சயம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்ல முடியும்.

சரி, இப்படி சொல்லப்பட்டிருக்க கிருபையும் தவறாக பயன்படுத்த முடியும். இதையும் நான் அழுத்தமாக கூற விரும்புகிறேன். ஆனால் எளிமையான உண்மை இதுதான். புதிய விருப்பங்களாலும் கிறிஸ்துவுக்குரிய அன்பினாலும் தேவன் நமக்குள் உட்புகுத்திட்ட அவருடைய தெய்வீக சுபாவத்தை நாம் தரைக்குறைவாக எண்ணி

செயல்படாமல் இருந்திடலாம். உண்மையான விசுவாசிக்கன பிரதானமான அடையாளம் இதுதான்.

தொடர்ந்து மதுபானத்திற்கு அடிமையாக இருந்த ஒரு பெண்ணை எனக்கு தெரியும் ஏன்னா சிறுவயதில் அவள் கடுமையாக பலாத்காரம் செய்யப்பட்டிருந்தால். ஆனா உங்களுக்கு தெரியுமா, அவள் உண்மையானா விசுவாசி என்று எனக்கு தெரியும் எப்படின்னா அவள் ஜெபிக்கும்போது அவள் வாயிலிருந்து புறப்படும் முதல் வார்த்தை ஓதேவனே உம்மை எவ்வளவாய் நேசிக்கிறேன் என்பதை அறிவீர். இந்த பாவத்தை செய்ததற்காக என்னை மன்னியும். உமது மகிமைக்காக இந்த பாவத்தை மேற்கொள்ள உம்மை அதிகமாய் நேசிக்க எனக்கு உதவிடும் என்பாள். அதாவது இது இரட்சிக்கப்பட்டு பாவத்தை மேற்கொள்ள போராடும் ஒரு நபருடைய ஜெபமாகும் சிலர் ஓ நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன் எனக்கு விருப்பமானவற்றை செய்திடுவேன் என்கின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய காரியம், நிறையப்பேர், பயங்கர கட்டுப்பாட்டுடன் இருக்கும் ப்ர்த்ரூல்களிடம் வளர்ந்திருப்பதால் அவர்களுடைய உறவுகள் செயல்பாடுகளின் அடிப்படையில் அமைந்துவிடுகின்றன.

**லட்சர்:** ரைட், இது இன்னொரு பிரச்சனை ஜான். இதையும் ஒரு தனி நிகழ்ச்சியாக நடத்த முடியும் என்று நினைக்கிறேன். ஒரு நபர் விடுதலை அடைவதால் அவர்கள் பாவத்திற்கு விடுதலை பெற்றதாக

அர்த்தம் ஆகாது. அன்பு செலுத்தவும் கிறிஸ்தவ வாழ்வை சந்தோஷமாக அனுபவிக்கவும் அவர்கள் விடுதலை பெறுகின்றனர்.

ஆனால் நீங்க சொன்ன மற்றொரு காரியத்தை பார்டி பேச விரும்புகிறேன். அதாவது பாவம் செய்கிறவர்களின் காரியம் என்னவாகும், அவர்கள் தங்கள் இரட்சிப்பை இழக்கிறார்களா? இந்த நிகழ்ச்சியை இதை சொல்லித்தான் துவங்கினோம். இயேசுவின் வாத்தைகளை கவனியுங்கள். பவுல் சொன்னதை பார்த்தோம். இப்ப இயேசு சொல்கிறார், யோவான் 10:27-30ல், "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் என்னை பின்பற்றும். நான் அவைகளுக்கு நித்தியா ஜீவனை கொடுக்கிறேன். அவைகள் ஒருகாலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பரித்துக்கொள்வதும் இல்லை. அவைகளை எனக்கு தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராக இருக்கிறார். அவைகளை என் பிதாவின் கைகளிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் என் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம். இதை நான் என்ன சொல்வேன்னென்று தெரியுமா?ஒருமுறை இதை வைத்து நான் பிரசங்கித்தேன் அதன் தலைப்பு கைகளில் இருப்பதில் கொண்டாட்டம். இயேசுவுக்கு சொந்தமான ஆட்டை பிதாவின் கரங்களும் குமாரனுடைய கரங்களும் அனைத்துக்கொண்டிருக்கிறது.

அதாவது நீங்கதான் ஒரு மேய்ப்பன், ஜான், நான் நூறு ஆடுகளை உங்களிடம் தருகிறேன். நீங்க சாயங்காலம் வரும்போது தொண்ணூற்றி மூன்று ஆடுகள் தான் இருக்கிறது. மற்ற மேய்ப்பர்கள் என்ன சொல்வாங்கன்னு நினைக்கிறீர்கள்?. அது என்னுடைய ஆடுகளாக இருந்தா நா என்ன சொல்வேன்னு நினைக்கிறீங்க? நான், ஜான், நீ அஜாக்கிரதையான மேய்ப்பன் என்றிடுவேன். அதற்க்கு நீங்க, ஓ ஆனா அந்த ஆடுகள் பிடிவாதமானவைகள் என்றிடுவீர்கள். தன்னோட இஷ்டத்திற்கு போய்விட்டது. தவறான பாதையை தெரிந்துகொண்டு அதில் போகவேண்டும் என்று தீர்மானித்தன என்பீர்கள். அதற்கு நான் ஜான் அந்த ஆடுகள் பிடிவாதமுள்ளதா என்று எனக்கு தெரியாது அந்த பிடிவாதமான ஆடுகளை பிடித்து உங்க வழியில் நடக்க வைத்து என்னிடம் கொண்டுவாருங்கள் என்பேன்.

உங்களால சொல்ல முடியாத அதாவது இயேசுவுக்கு சொந்தமானவர்கள், ஈவாக அருளப்பட்டவர்கள் வேடம் கூறுகிறது பிதாவினிடத்திலிருந்து குமாரனுக்கும் குமாரநிடத்திளிருந்து பிதாவிற்கும் என இரட்சிக்கப்பட்டவர்கள் இயேசுவிடம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர் அளிக்கப்பட்டிருக்கின்றனர். மேலும் நித்தியத்திற்கு வரும்போது நிச்சயம் அதில் சிலது காணாமல் போயிருக்கும் சரி அவர்களுக்கு சுய சித்தம் இருந்ததால் சென்றார்கள். அதிக பிடிவாத குணமுடையவர்கள். கவனியுங்கள்.

இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். அவர் அவர்களை நிச்சயமாக வீடிற்கு அழைத்துச் செல்வார்.

நான் இப்படிதான் சொல்லுவேன். ஆமா, உங்களுக்கு தெரியுமா, என் பிதாவின் கரத்திலிருந்து ஒருவரும் அதை பறிக்கு முடியாது என்றிருக்கிறது. ஆனால் நம்மை நாமே பிதாவின் கராத்திளிருந்து விடுடித்துக்கொள்ள முடியும். இது கொஞ்சம் குழப்பமானதாக காணப்படலாம். வேதாகமத்தின்படி நாம் தேவனுடைய கரத்தில் இருக்கிறோம். இயேசு சொன்னது நினைவிருக்கட்டும் நீங்கள் என் சரிரத்திலும் மாம்சத்திலும் இரத்தத்திலும் பங்குள்ளவர்களாக இருக்கிறீர்கள். எபே. 5:3o

எனவே நான் செய்ய விரும்புகிற காரியம் இதுதான், ஜான். கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கு பாதுகாப்பளிக்க விரும்புகிறேன். ஆனால் இதுவரை கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் அப்படி செய்ததாக நினைத்துக்கொண்டிருக்கிரவர்களை எச்சரிக்க விரும்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** இதை சொல்லி முடித்திடலாம், எர்வின்.மெய்யான இரட்சிக்கும் விசுவாசம் என்ன என்பதற்கு சிறப்பான உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள். நிதானமாக அந்த உதாரணத்தை எங்களுக்கு சொல்லுங்கள்.

**லட்சர்:** ஜான் அந்த உதாரணத்தை நான் சொல்லுகிறேன் ஆனால் அதோடு சிலவற்றை இணைத்து கூறிட விரும்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஓகே

**லட்சர்:** இந்த கேள்வியை கேட்கிற சிலர் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். என்னை நானே பலமுறை கேட்டுக்கொண்ட கேள்வி. கிறிஸ்துவர்கள் நிலை என்ன. உண்மையான கிறிஸ்தவர்கள் தற்கொலை செய்துகொள்வது சாத்தியமா?

இந்த கேள்விக்கான பதில் என்ன தெரியுமா, முடியும். சில பணித்தளத்திலிருந்து திரும்பி வந்த மிஷனரிகள் அழுத்தத்தை தமகா முடியாமல் தற்கொலை செய்துகொண்டதை பார்த்திருக்கிறேன். வேதாகம கல்லூரி விரிவுரையாளர் தற்கொளை செய்திருக்கிறார். நீங்க கேட்கலாம், சரி, அவர்களுக்கு என்ன நடக்கும்? அவர்களும் பரலோகத்தில் இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இப்ப நான் சொல்லாததை கேட்டு எந்த தீர்மானமும் எடுக்க வேண்டாம். தற்கொலை சரியானதென்று நான் சொல்லவில்லை. தற்கொலை என்பது தற்காலிக பிரச்சனைக்கான நிரந்தர தீர்வு. அது ஒரு கொலை. வாழ்வில் தோற்றுப்போவது. நீங்கள் அதை செய்யாதீர்கள். எல்லாருக்கும் நான் சொல்ல முடியும் - இப்படிப்பட்ட அநேகருக்கு ஆலோசனை அளித்து அவர்களுக்கு உதவியிருக்கிறேன் அப்போது சொல்வேன், நிச்சயம் விடிவுகாலம் வரும். இதை முயற்சிக்காதே

என்றிடுவேன். ஆனால் அந்த நிலையினருக்கும் கிறிஸ்து மரித்திருக்க அவருடைய ஆடுகளை திரும்பவும் வீட்டில் சேர்க்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** நீங்க தொடர்ந்து பேசுவதற்கு முன் ஒரு நிமிடம், என்ன நீங்க சொன்ன காரியத்தை கேட்ட பிறகு நிறைய கடிதங்கள் வந்திடும். நீங்க இப்ப சொன்னது உண்மைதான். அதாவது, நீங்கள் ஒருவேளை தற்கொலையை தேவனுடைய ராஜ்யத்திலிருந்தும் அவருடைய கரங்களிளிருந்தும் உங்களை விலகச்செய்திடும் பாவமாக பார்த்தால் ஏன் தற்கொலையை தடுத்து நிருத்தக்கூடாது?அப்படியென்றால் இந்த பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய பாவங்கள் இன்னும் இருக்கிறது. பார்த்துக்கொண்டிருப்பவர்களின் பாவப்பட்டியலை கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இதுதான் கொடுரமான பாவம். ஆனால் தற்கொலை செய்துகொல்ல்ய்கிரவர்கள் பதுகாப்படைவதாக உணருகிறார்களா?

**லட்சர்:** அதற்க்கு காரணம் அவர்கள் இயேசுவுக்கு உரியவர்கள் இயேசு அவர்களை வீட்டில் சேர்த்திடுவார். அனால் இதை பார்த்துகொண்டிருப்பவர்கள் ஒருவேளை சொல்லலாம் ஓ இது மிகவும் பரிதாபகரமான காரியம் என்று. நீங்க தற்கொலை செய்து கொள்ளலாம் என்று நினக்கிரீகள. கவனியுங்கள் இதை கேட்டுக்கொண்டிருப்பவர்கள் ஒருவேளை கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கலாம், நாங்கள் உண்மையான கிறிஸ்தவர்களை பற்றி

பேசிக்கொண்டிருக்கிறோம், அவர்களுக்கு என்ன நடக்கும் என்று உங்களுக்கு தெரியுமா? அவர் ஒரு பாவத்தை செய்ய முயலலாம் - அது இச்சையின் பாவமாக இருக்கலாம்.பொருளாசை என்னும் பாவமாக இருக்கலாம், பெருமை என்னும் பாவமாக இருக்கலாம். அதை அறிக்கை செய்ய வாய்ப்பில்லாமல் அவர் இறந்துபோக வாய்ப்பிருக்கிறது. அப்படிப்பட்டவர் பரலோகம் செல்ல முடியுமா? அதற்கான பதில் முடியும். அதாவது அவர் ஒரு விசுவாசியாக இருந்தால் போகலாம். வேறு வார்த்தைகளில் சொன்னால் ஒரு நபர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது சட்ட பூர்வமாக பரலோகத்தில் கிறிஸ்து அவர்களுடைய பிரதிநிதியாக நிற்கிறார். அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் மறந்தும் அந்த வீட்டை அடைகிறார்கள்

**ஆன்கர்பெர்க்:** அதோடு உங்களுடைய இறுதியான உதாரணத்தை கேட்கும் முன்பு - மறுபடியும் சொல்லுகிறேன் அதாவது செயல்பாடுகள் உங்களை இரட்சிப்பதில்லை. கிறிஸ்துவும் அவருடைய செயலுமே உங்களை இரட்சிக்கிறது.

**லட்சர்:** மேலும் ஜான், நாம் டேட் டர்னரை பற்றி பார்த்தபோது அவர் ஏழு அல்லது எட்டு முறை இரட்சிக்கப்பட்டதாக சொன்னது உங்களுக்கு நினைவிருக்கிறதா? இந்த காரியங்களில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர் சொல்லுகிற மற்றவைகளை கேளுங்கள். அவர் பாவ நிவாரண பலியை மோசமானதாக கருதுகிறார். அப்படி இதை

மோசமானதாக நினைப்பதால் அவர் சொல்கிறார், பாவம் என்ற எண்ணம் தவறானது என்கிறார். இதை வாசித்து கட்டுகிறேன்.

ஓகே டேட் டர்னர் சொல்லுகிறார், வேதாககத்தை அது வியாக்கியானம் செய்யப்பட்ட விதத்தை அப்படியே எடுத்துக்கொண்டால் எல்லாரும் நரகத்திற்கு தான் செல்ல வேண்டும். பாவன் என்கிற எண்ணம் சுத்த அருவருப்பான ஒன்று. கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து பாடு அனுபவித்து சிலுவையில் மரித்து இரத்தம் சிந்தி அந்த இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்படுகிறதா? கஷ்டம் என்கிறார். எளிமையான உண்மை இதுதான். அவர் சுவிசேஷத்தை புரிந்துகொள்ளவில்லை அதன் விளைவாக தான் இன்றைக்கு தாங்கள் நம்புவதாக எண்ணிக்கொண்டு தவறாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறோம்.

இரட்சிக்கும் விசுவாசம் என்ன என்பதை சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடிக்கட்டுமா? அதாவது, ஒரு உதாரணம் இருக்கிறது. உண்மை சம்பவம் அல்ல. ஒரு மனிதன் குன்றின் மீது நடந்துகொண்டிருக்கிறான் தவறி விழுகிறார். ஒரு கொடியை பிடித்து தொங்குகிறான். அவன் நோக்கி பார்க்கும் போது ஒரு தூதன் அவனருகில் நிற்கிறான். தூதன் அவனிடம், என்னால் உன்னை கப்பட்ட்ற முடியும் என்று நினைக்கிறாயா என்றான். தூதனுடைய பலமான தூள்களை பார்த்து இவன் சொன்னான் ஆமா என்னை கப்பட்ட்ற உன்னால் முடியும் என நம்புகிறேன். ம்த்ஜர்க்கு அந்த தூதன் நான் உன்னை காப்பாற்றுவேன் என்று நம்புகிறாயா என்றான்.

தூதனுடைய முகத்தில் புன்னகையை பார்த்தா அந்த மனிதன் ஆமாம் என்னை காப்பாற்றுவாய் என நம்புகிறேநேன்றான். அதற்க்கு அந்த தூதன் என்னால் உன்னை கப்பட்ட்ற முடியும் நான் காப்பாற்றுவேன் என்று நம்பினால் அந்த கிளையை விடு என்றான்.

கிறிஸ்துவிடம் வரும்போது நாம் என்ன செய்கிறோம்? சுய நீதியை விட்டுவிடுகிறோம். நான் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருக்க விரும்பும் அனைத்தையும் நாம் விட்டுவிடுகிறோம். நம்முடைய அந்தஸ்தை நாம் விட்டுவிடுகிறோம். நம்முடைய பெருமையை விட்டுவிட்டு நம்மை இரட்சிக்க கூடிய ஒருவரையே சார்ந்துகொள்கிறோம். அதனால் தான் நாம் தேவனுடைய ஆடுகளில் ஒன்றாக இருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே கிறிஸ்து உங்களை இரட்சிக்க விரும்புகிறீகளா? எல்லாவற்றையும் விட்டுவிட்டு கிறிஸ்து செயல்ப்படும்படியாக விட்டுகொடுக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் எர்வின் அவர்கள் உங்களோடு ஜெபிக்கும்படி, ஜெபத்திலே நடத்திடுங்கள் ஏனென்றால் அதுதான் முக்கியமானது

**லட்சர்:** அதிக முக்கியம் பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே எங்கள் பெயப்பராகிய இயேசுவிற்காக நன்றி. இப்போதும் இதை கேட்டுக்கொண்டிருக்கிரவர்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். ஜெபிக்கும்படி அவர்களுக்கு கிருபை தாரும். அறிக்கை செய்யட்டும், ஓ தேவனே நான் ஒரு பாவி, பாவிகளுக்காக இயேசு மரித்ததற்காக நன்றி. இந்த நிமிடத்தில் இயேசுவை என் பிரதிநிதியாக என்

இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். விசுவாசத்தோடு அவரை ஏற்றுக்கொள்கிறேன். இந்த ஜெபத்தை ஏறடுத்த அனைவரையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்திற்குள்ளாக நடத்திடும்.தேவனே . இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** அடுத்த வாரம் இதை தொடர்ந்து பார்க்க இருக்கிறோம் ஏனென்றால் இந்த காரியத்தை பற்றி அநேக கேள்விகள் எழுப்புகின்றனர் அதற்க்கு நாமளிக்கும் தலைப்பு: நிச்சயமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்.

**லட்சர்:** நான் சந்தேகத்தால் போராடிக்கொண்டிருந்த ஒரு வேதா பாட ஆசிரியை ஒருவரை குறித்து நான் சொல்லப்போகிறேன். சந்தேகத்தை கொண்டுவரும் காரியங்களை எப்படி மேற்கொண்டு தைரியமாக சொல்லமுடியும். ஆமாம் எனக்கு தெரியும் இட்ஸ் ஓகே நான் பரலோகம் சென்றிடுவேன்.

**ஆன்கர்பெர்க்:** மேலும் நீங்கள் பல விசுவாச மனிதர்களை பற்றியும் பார்க்கப்போகிறீர்கள். - பேதுரு, யோவான் ஸ்நானகன், மற்றும் பலர் - சந்தேகத்தோடு போராடினார்கள் அதைபற்றி பேசப்போகிறோம். சந்தேகத்தோடு நீங்க ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியும். ஆனா, உங்க சந்தேகத்தை குறித்த கேள்விகளுக்கு வேதாகம பதிலை பெற்று இருதயத்ஹ்டில் சந்தோஷத்தோடு இருப்பது எப்படி? அது மிகவும் முக்கியமானது. அடுத்த வாரம் காணத்தவறாதீர்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.